## ஜுன் – 8

**"தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்."**

**- யாக் 5 : 20**

தடுக்கப்பட்ட வழிகளில், அக்கிரமக்காரரின் வழியில் நடந்து கொண்டிருக்கிற மற்றவர்களை நாம் பார்க்கும் போது, அவர்களை அதிலிருந்து திருப்புவதற்காக அவர்களை அங்கு நாம் பின் தொடரக்கூடாது. ஆனால் சரியான வழியில் நம்மைக் காத்துக் கொண்டு, அவர்களுக்கு அந்த சரியான பாதையைக் காண்பிக்கவும் அதற்கு அழைக்கவும் வேண்டியவர்களாயிருக்கிறோம். அடிப்படை ரீதியில் தப்பிதமானவைகள் என்று நாம் அறிந்திருக்கிற மனிதருடைய உபதேசங்களினாலும் போதனைகளினாலும் தங்களையே குழப்பிக் கொண்டிருக்கிற சிலரை நாம் பார்க்கும் போது, அவர்களை அவைகளிலிருந்து வெளியே கொண்டு போவதற்காக, அந்த உபதேசங்களைப் படிக்கக்கூடாது. ஆனால் அஸ்திபாரத்தோடு பொருந்தாத எந்தப் போதனையையும் ஊன்றிப்படிப்பது பிரதிஷ்டை செய்த நேரத்தை தகாத வழியில் உபயோகிப்பது மாத்திரமல்லாமல், தவறான உபதேசம் என்று அறிந்திருக்கிறதின் பேரில் லாபகரமில்லாமல் நேரத்தை வீண் செலவு செய்வது எல்லாம் தவறானதும் அபாயகரமானதுமாகும். ஏனென்றால், மனச்சாட்சியையும், தத்துவத்தையும் மீறும் எல்லா செயல்களும் அபாயகரமானவைகள். **- Z '05, 203 (R 1860).**

இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாவி, 19-வது வாக்கியம் காண்பிக்கிற பிரகாரம் பொதுவாக, பின் வாங்கிப்போன ஒரு ஆளைக்குறிக்கிறது. முக்கியமாக, இது தங்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளுக்கு விரோதமாகப் பாவம் செய்த திரள் கூட்டத்தாரைக் குறிக்கிறது. அவர்களுடைய போக்கு, இன்னமும் மனப்பூர்வமாக வேண்டுமென்றே செய்கிற அபாயமான கட்டத்தில் அவர்களைத் தொடர்ந்து வைத்து, முடிவில் இரண்டாம் மரணத்தை அடையச் செய்கிறது. (எபி 6:4-6) அப்படிப்பட்டவர்களைத் தங்களுடைய அபாயத்திலிருந்து விடுவிக்கவும், அதன் மூலமாக ஸ்திரபுத்தியில்லாதவர்களின் திரளான மீறுதல்களை கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் மூடவும் நாடுவது, கர்த்தருடைய ஜனங்களின் சலுகையாக இருந்திருக்கிறது. **-P '33, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-** சங் 19:7; 51:13; மத் 18:3; லூக் 22:32; அப் 3:19; யாக் 5:14-19; மத் 18:15-17; 1கொரி 5; 1தீமோ 1:19,20; எபி 3:12-14; 10:25; கலா 6:1; 1யோவா 5:16; வெளி 7:14.

**கோபுரவாசிப்பு : Z '02, 199 (R 3033)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் தப்பிப்போன சகோதரனையோ அல்லது சகோதரியையோ மனந்திரும்பச் செய்தேனா? எப்படி? எதனால்? முடிவு என்ன?